தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

நாள்	நேரம்	மண்டலம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
14.12.2024 சனிக்கிழமை	காலை 9.00 மணி	7	திருமயம்	ஏ.கே.பி.மஹால், மதுரை சாலை, திருமயம்.
	மாலை 4.00 மணி		மயிலாடுதுறை	விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை.
15.12.2024 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி		பூம்புகார்	அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோயில்.
	மாலை 4.00 மணி		புதுக்கோட்டை	எம்.ஏ.கிராண்ட் ஹோட்டல், ஜனப்ரியா சூப்பர் மார்க்கெட் அருகில், புதுக்கோட்டை.
	காலை 9.00 மணி	8	அருப்புக்கோட்டை	வேல்ராஜன் திருமண மண்டபம், அருப்புக்கோட்டை.
	மாலை 4.00 மணி		சாத்தூர்	எஸ்.கே. பாரடைஸ் மஹால், சாத்தூர்.
17.12.2024 செவ்வாய்க்கிழமை	காலை 9.00 மணி		சிவகாசி	நாச்சியார் மஹால், சசி நகர், சித்துராஜபுரம், சிவகாசி.
	மாலை 4.00 மணி		விருதுநகர்	வி.வி.வி.அரங்கம், அம்பாள் மண்டபம் பின்புறம், அருப்புக்கோட்டை சாலை, விருதுநகர்.

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் அரசு பொது மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக ரூ.3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடப் பணியை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மருத்துவத் துணை இயக்குனர் நளினி, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், ஒன்றிய குழு துணை தலைவர் பி.சேகர், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் என்.பாண்டியன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே.தியாகராஜன், ஒன்றிய குழு உறுப்பினர் டி. சஞ்சய் காந்தி உள்ளிட்ட துணை தலைவர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலாங்கரை வி.இ.மதியழகன் எம்.சி. முன்னிலையில் – இரா.நாகேந்திரன் தலைமையில்

சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் 1247 நபர்களுக்கு நலஉதவிகள் - பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச. 14

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 1247 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம் இன்று (14.12.2024 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, நீலாங்கரை, அறிஞர் அண்ணா நகர், 4 வது தெருவில் நடைபெறுகிறது.

பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா. நாகேந்திரன் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர், 15 வது மண்டலக் குழுத் தலைவர் நீலாங்கரை வி.இ.மதியழகன் முன்னிலை வகிக்கிறார்.

மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் வி.எட்டியப்பன், 192 வது வட்டக் கழகச் செயலாளர் கே.குமார், எஸ்.ஜானகிராமன், மா.மகேஸ்வரன், ஜி.விஜயகுமார், வி.எஸ். சுதா, எம்.பாஸ்கரன், க.ஏகாம்பரம், கே.வி.சாந்தப்பன், எஸ். ஆறுமுகம், கி.சத்தியவேலன், எஸ்.கர்ணா, ஏ.கே.ஆனந்த், பி.என்.ஜோதி, டி.சீனிவாசன், டி.குப்பன், வி.இராமசாமி, தன பாக்கியம் ரமேஷ், அ.சேகர், இ.வெங்கடேஷ், ஆ.சுரேஷ், எஸ்.இளங்கோவன், ஆர். துளசி, ஓ.சுந்தரம், ஏ.கே.துரை, சி.செந்தில், ஜி.ஆறுமுகம், ஆர். பற்குணன், டி.சுந்தரம், பி.சம்பத், பி.வேலாயுதம், ஒய்.ஏ. கார்த்திகேயன், ஆடிட்டர் ஆறுமுகம், ஜெ.சிவக் கொழுந்து, வெல்டிங் வேலு, சி.ராஜாமணி, எஸ்.ஜீவா, கே.டி.ஏ. பிரபாகர், எம் கதிர் இரா நாகேந்திரன் டி ராஜேந்திரன் எஸ் முருகன், பி. ஜான் செல்வராஜ், பார்த்திபராஜன், ச.ராஜேந்திரன், கே.மோகன், எஸ்.சதீஷ், ஏ. செல்வா, பி.முருகவேல், ம.து.ரமேஷ், வையாபுரி, ஆர்.ஆறுமுகம், எஸ். சுரேஷ், எஸ்.செந்தில், எஸ். ரமேஷ், பி.மூர்த்தி, ஒய்.ஏ. ஏழுமலை ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் பொன்னேரி சிவா, மகேஷ், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மத்திய பகுதிக் கழகச் செயலாளர், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பாலவாக்கம் க.சோமு, எஸ்.குண சேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பெருங்குடி எஸ்.வி.ரவிச் சந்திரன், ஜி.வெங்கடேசன், எஸ்.சங்கீதா பாரதிராஜன், எம்.கே.ஏழுமலை, மேடவாக்கம் ப.ரவி, தா.பஷீர், ஆ.அரிகிருஷ்ணன், சி.பிரதீப், ரத்னா லோகேஸ்வரன், கா.வீ.தியாகராஜன், ஜெ.இ. பாண்டியன், பா.அருண்குமார், எம்.பார்த்திபன், என்.அனிஷ், த.விஜய பாலன், கி.ஸ்டாலின்மொழி,

பகுதிக் கழகச் செயலாளர்கள் எம்.கிருஷ்ண மூர்த்தி, இரா.துரைராஜ், நொளம்பூர் வே.ராஜன், கே.கண்ணன், மு.ராசா, துரை கபிலன், அரிமா சு.சேகர், அயப்பாக்கம் அ.ம. துரை வீரமணி மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், சோழிங்கநல்லூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் ஏ.சி.எம்.குமார், பி.வரதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.